# பங்குதாரர்களுக்கான **நிர்வாக வழிகாட்டி**


| உள்ளடக்க அட்டவணை | | பக்கம் |
|---|---|---|
| A | அறிமுகம் | 1 |
| B | தொலைவிலிருந்து ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் எப்படி பங்கேற்பது | 1 |
| C | ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடர்புடைய ஆவணங்களை எப்படி பெறுவது | 3 |

# பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

## A. அறிமுகம்

DRB-HICOM Berhad ("DRB-HICOM")-இன் 33வது வருடாந்திர பொதுக்கூட்டம் ("AGM") ஒளிபரப்பு களத்திலிருந்து மெய்நிகர் வழியாகவும் தொலைவிலிருந்து பங்கேற்பதன் வழியாகவும் பின்காணும் நிரலின்படி நடைபெறும்:

| | | |
|---|---|---|
| **திகதி** | : | திங்கட்கிழமை, 29 மே 2023 |
| **நேரம்** | : | காலை 10.30 மணி |
| **ஒளிபரப்புக் களம்** | : | Training Hall, Level 6, Wisma DRB-HICOM, No. 2, Jalan Usahawan U1/8, Seksyen U1, 40150 Shah Alam, Selangor Darul Ehsan. |
| **இணையவழி கூட்டத் தளம்** | : | https://meeting.boardroomlimited.my |

DRB-HICOM பங்குதாரர்களை தங்கள் வீடு அல்லது அலுவலகத்தில் இருந்து ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் மெய்நிகர் வழியாக முழுமையாக பங்கேற்குமாறு அழைக்கின்றது. பங்குதாரர்களுக்கான இந்த நிர்வாக வழிகாட்டி ("வழிகாட்டி") தொலைவிலிருந்து பங்கேற்பிற்கான பதிவு, பிரதிநிதிப் படிவங்களை சமர்ப்பித்தல், கேள்விகளைச் சமர்ப்பித்தல் மற்றும் வாக்களிப்பது உட்பட இந்த மெய்நிகர் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குதாரர்கள் திறம்பட பங்கேற்பதற்கான வழிகளை அமைக்கிறது.

## B. தொலைவிலிருந்து ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் எப்படி பங்கேற்பது

1. தொலைவிலிருந்து பங்கேற்கும் மற்றும் மின்னியல் வாக்களிக்கும் ("RPEV") வசதிகள் கீழ்க்காணும் நபர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்:

   **(i) தனி அங்கத்தினர்கள்;**
   **(ii) நிறுவனப் பங்குதாரர்கள்;**
   **(iii) ஒப்புச்சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள்; மற்றும்**
   **(iv) விலக்களிக்கப்பட்ட ஒப்புச்சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள்.**

2. இணையவழிக் கூட்டத்தில், நிர்வாகக் குழுவிற்கான கேள்விகளை, https://meeting.boardroomlimited.my-இல் கூட்டத் தளம் வழியாக அனுப்புவதோடு தீர்மானங்களுக்கான உங்கள் வாக்குகளையும் நிகழ் நேரத்தில் பதிவு செய்யலாம்.

   பங்குதாரர்கள், ஆண்டுப் பொதுக்கூட்ட தீர்மானங்கள் மற்றும் 2022 ஆண்டறிக்கை குறித்த தங்கள் கேள்விகளை 29 ஏப்ரல் 2023 தொடங்கி 27 மே 2023 சனிக்கிழமை காலை 10.30 மணிக்குள் நிர்வாகக் குழுவின் வலைத்தளமான https://investor.boardroomlimited.com மூலம் முன்கூட்டியே அனுப்பலாம். கீழ்க்காணும் படிநிலை 2 இல் வழங்கப்பட்டுள்ள அதே பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைப் பயன்படுத்தி "SUBMIT QUESTION" ஐத் தேர்ந்தெடுத்து உங்கள் கேள்விகளை அனுப்பலாம் (ஆண்டுப் பொதுக்கூட்டத்துக்கு முந்தைய கேள்விகள்").

3. ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்க, தங்களுக்கு பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் தேவைப்படும். கீழ்க்காணும் வழிமுறைகள் நீங்கள் பயனர் அடையாளம் மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றைப் பெற உதவும்.

4. **தொலைவிலிருந்து பங்கேற்க பதிவுசெய்தல்**

   மெய்நிகர் ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் பங்குதாரராகப் பங்கேற்பதற்கு பதிவு செய்ய அல்லது ஒரு பிரிதிநிதியை நியமிக்க பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றவும்::

**ஏஜிஎம்-க்கு முன்**

**படிநிலை 1 - தனி அங்கத்தினர் மற்றும் நிறுவனப் பங்குதாரருக்கான Boardroom Smart Investor Portal ("BSIP")-இல் இணையவழியில் பதிவு செய்யவும்**

*குறிப்பு:*
- *BSIP-இல் நீங்கள் முன்பே பதிவுசெய்திருந்தால், நீங்கள் படிநிலை (2) க்கு நீங்கள் செல்லலாம்.*
- *BSIP இப்போது நிர்வாகப் பங்குதாரர்களின் பதிவை எளிதாக்குகிறது.*

(முதல் முறை BSIP பயனர்களுக்கு மட்டுமே)

a. https://investor.boardroomlimited.com என்ற வலைத்தளத்திற்குச் செல்லவும்
b. பயனராகப் பதிவு செய்ய "**Register**" ஐக் கிளிக் செய்யவும்
c. "**பங்குதாரராகப் புகுபதிவை செய்ய**" அல்லது "**நிறுவனப் பங்குதாரராகப் புகுபதிவை செய்ய**""Account Type"-ஐத் தேர்ந்தெடுக்கவும்
d. பதிவை முடித்து MyKad (முன் மற்றும் பின்பக்கம்) அல்லது பாஸ்போர்ட்டின் மென்நகல் மற்றும் நிறுவனப் பங்குதாருக்கான அங்கீகாரக் கடிதம்(டெம்ப்ளேட் வழங்கப்பட்டுள்ளது) போன்ற தேவையான ஆவணங்களைப் பதிவேற்றவும்
e. சரியான கைத்தொலைப்பேசி எண், மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல்லை உள்ளிடவும்
f. "**Sign Up**" மீது கிளிக் செய்யவும்
g. BSIP-இலிருந்து மின்னஞ்சல் முகவரியை உறுதி செய்வதற்கு மின்னஞ்சல் ஒன்றைப் பெறுவீர்கள்; '**Verify e-mail Address**'-இன் மீது கிளிக் செய்து பதிவைத் தொடரவும்
h. உங்கள் மின்னஞ்சல் உறுதி செய்யப்பட்டவுடன், உங்கள் கைத்தொலைப்பேசி எண்ணை உறுதிப்படுத்த BSIP-க்கு அழைத்துச் செல்லப்படுவீர்கள்; "**Request OTP Code**" என்பதைக் கிளிக் செய்த பிறகு பதிவு செய்யப்பட கைத்தொலைப்பேசி எண்ணிற்கு OTP எண் அனுப்பப்படும்; செயல்முறையை முடிக்க OTP குறியீட்டை உள்ளிட்டு "**Enter**" ஐக் கிளிக் செய்யவும்
i. உங்கள் BSIP கணக்கு அங்கீகரிக்கப்பட்டதைத் தெரிவித்து ஒரு (1) வேலை நாளுக்குள் உங்களுக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பப்படும்; BSIP-இல் நீங்கள் https://investor.boardroomlimited.com/ என்ற பக்கத்தில், பதிவு செய்த போது வழங்கிய மின்னஞ்சல் முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் உள்நுழைந்து அடுத்தப் படிநிலைக்குச் செல்லலாம்

# பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

**படிநிலை 2 - தொலைவிலிருந்து பங்கேற்க கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும்**
*குறிப்பு: நீங்கள் BSIP பயனராகப் பதிவு செய்திருக்க வேண்டும். இல்லையெனில் படிநிலை 1-க்குத் திருப்பிச் செல்லவும்*

RPEV வசதிகளுக்கான பதிவு **28 ஏப்ரல் 2023, வெள்ளிக்கிழமை முதல் 29 மே 2023**, திங்கட்கிழமை வரை, வாக்களிப்பு அமர்வு முடிவடைவதற்கு முன்பு, ஏஜிஎம் கூட்டத்தின் தலைவரால் அறிவிக்கப்படும் வரை திறந்திருக்கும்.

பிரதிநிதியை நியமிக்கும் கருவி, **27 மே 2023, சனிக்கிழமை காலை 10.30 மணிக்குள்** ("பிரதிநிதி பதிவுசெய்வதற்கான காலக்கேடு ") பெறப்பட வேண்டும்.

தனி அங்கத்தினர் மற்றும்/அல்லது நிறுவனப் பங்குதாரர்கள்:

a. https://investor.boardroomlimited.com என்ற வலைதளத்தில் உள்நுழையவும்
b. 'Meeting Event(s)' ஐக் கிளிக் செய்து நிறுவனப் பட்டியல்களில் இருந்து தேர்ந்தெடுத்து - '**DRB-HICOM BERHAD 33RD ANNUAL GENERAL MEETING**' "**Enter**" ஐக் கிளிக் செய்யவும்
c. மெய்நிகர் ஏஜிஎம்-இல் தொலைவிலிருந்து பங்கேற்க:
   - "**Register for RPEV**"ஐ கிளிக் செய்க
   - பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து ஏற்ற பிறகு உங்கள் கோரிக்கையை முன்வைக்க உங்கள் CDS கணக்கு எண்ணை உள்ளிடவும்
d. பிரதிநிதியை நியமிக்க:
   - "**Submit eProxy Form**" மீது கிளிக் செய்யவும்
   - நிறுவனப் பங்குதாரருக்காக, நீங்கள் பிரதிநிதித்துவம் செய்ய விரும்பும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கவும் (ஒன்றுக்கு மேல் இருந்தால்)
   - பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்து ஏற்ற பிறகு உங்கள் CDS கணக்கு எண்ணை உள்ளிடவும் பின்னர் உங்கள் பிரதிநிதி விவரங்கள் மற்றும் வாக்களிப்பு வழிமுறைகளை உள்ளிடவும்; உங்கள் பிரதிநிதி(கள்) அவரது விருப்பப்படி செயல்பட விரும்பினால், தயவுசெய்து "விருப்பப்படி" என்பதைக் குறிப்பிடவும்

ஒப்புச் சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள் மற்றும்/அல்லது விலக்களிகிக்கப்பட்ட ஒப்புச் சான்றுடைய முன்மொழியப்பட்டவர்களுக்கு:

a. https://investor.boardroomlimited.com என்ற வலைதளத்தில் உள்நுழையவும்.
b. 'Corporate Meeting' ஐக் கிளிக் செய்து நிறுவனப் பட்டியல்களில் இருந்து தேர்ந்தெடுத்து - '**DRB-HICOM BERHAD 33RD ANNUAL GENERAL MEETING**' "Enter"ஐக் கிளிக் செய்யவும்.
c. "**Submit eProxy Form**" மீது கிளிக் செய்யவும்.
d. நீங்கள் பிரதிநிதித்துவம் செய்ய விரும்பும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கவும் (ஒன்றுக்கு மேல் இருந்தால்).
e. "**Submission of Proxy Form**"-க்கான கோப்பு வடிவத்தைப் பதிவிறக்கவும்.
f. தேவையான தரவை உள்ளிட்டு பிரதிநிதி/பிரதிநிதிகளை நியமிக்க கோப்பை ஆயத்தம் செய்யவும்.
g. முறையாக நிரப்பப்பட்ட பிரதிநிதி நியமனக் கோப்பை பதிவேற்றவும்.
h. உங்கள் பிரதிநிதி/பிரதிநிதிகள் நியமனத்தை மதிப்பாய்வு செய்து உறுதிப்படுத்தி "**Submit**" ஐக் கிளிக் செய்க.
i. ஒப்புகைக்காக மின் பிரதிநிதிப் பாட்டிவைத்தை பதிவிறக்கவும் அல்லது அச்சிடவும்.

நிறுவனப் பங்குதாரர்கள்/ஒப்புச் சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள் /விலக்களிக்கப்பட்ட ஒப்புச் சான்றுடைய முன்மொழியப்பட்டவர்கள்/ வழக்கறிஞர்களுக்கு, நீங்கள் bsr.helpdesk@boardroomlimited.com மின்னஞ்சல் அனுப்பி பங்குதாரரின் பெயர், CDS கணக்கு எண் மற்றும் மற்றும் நிறுவனப் பிரதிநிதியின் நியமனச் சான்றிதழ் அல்லது பிரதிநிதிப் படிவத்தை வழங்கலாம் (சந்தர்ப்பத்திற்கு ஏற்றாற்போல்). உங்களது MyKad அல்லது பாஸ்போர்ட்டின் நகல் மற்றும் மின்னஞ்சல் முகவரி தேவை.

**படிநிலை 3 - சரிபார்ப்பு மற்றும் மின்னஞ்சல் அறிவிப்பு**

a. கணினிச் சரிபார்ப்பிற்காக தொலைவிலிருந்து பங்கேற்புக்கான உங்கள் கோரிக்கை பெறப்பட்டது என்பதைத் தெரிவிக்க Boardroom ஒரு மின்னஞ்சல் அறிவிப்பை அனுப்பும்.
b. வைப்பாளர்களின் பொதுக் கூட்டப் பதிவுக்கு எதிராகச் சரிபார்த்தபின், 33வது ஏஜிஎம்-க்கு முந்தைய நாள், அதாவது 28 மே 2023 ஞாயிற்றுக்கிழமை அன்று, தொலைவிலிருந்து பங்கேற்புக்கான உங்கள் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதை அல்லது நிராகரிக்கப்பட்டதை தெரிவித்து ஒரு மின்னஞ்சலைப் பெறுவீர்கள்.
c. உங்கள் பதிவு அங்கீகரிக்கப்பட்டிருந்தால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் மெய்நிகர் ஏஜிஎம்-இன் கூட்ட அடையாளக் குறுயீடு, பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் வழங்கும்.

பங்கு பதிவாளர்களிடமிருந்து எனக்கு எந்த அறிவிப்பும் வரவில்லை.
உங்களுக்கு மின்னஞ்சல் வழி அறிவிப்பு வரவில்லை என்றால் தயவு செய்து கீழ்காணும் வழியில் நிர்வாகக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்:

உதவி தொடர்பு எண் +603 7890 4700; அல்லது
BSR.Helpdesk@boardroomlimited.com க்கு மின்னஞ்சல் அனுப்பவும்

# பங்குதாரர்களுக்கான நிர்வாக வழிகாட்டி

**ஏஜிஎம் நடைபெறும் நாளன்று**

**படிநிலை 4 - உள்நுழையவும்**

a. உள்நுழைவதற்கு RPEV வசதிகள் 29 மே 2023, திங்கட்கிழமை காலை 9.30 மணிக்குத் திறக்கப்படும், அதாவது 33வது ஏஜிஎம் தொடங்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்பு
b. மெய்நிகர் ஏஜிஎம்-இல் இணைய படிநிலை 3(c) இல் உள்ள மின்னஞ்சலில் வழங்கப்பட்ட இணைப்பைக் கிளிக் செய்யவும்; கூட்ட அடையாளக் குடியீட்டை உள்ளிட்டு, அதே மின்னஞ்சல் மூலம் உங்களுக்கு வழங்கப்பட்ட பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை வழங்கி உள்நுழையவும்

**படிநிலை 5 - பங்கேற்பு**

a. நேரடி ஒளிபரப்பைப் பார்க்க, கேள்விகளைச் சமர்ப்பிக்க மற்றும் வாக்களிக்க மின்னஞ்சலில் உள்ள பயனர் வழிகாட்டிகளைப் பின்பற்றவும்
b. நேரடி ஒளிபரப்பைப் பார்க்க, ஒளிபரப்பு சின்னத்தைத் தேர்ந்தெடுக்கவும்
c. 33வது ஏஜிஎம் நடைபெறும் போது கேள்வி கேட்பதற்கு மெசேஜிங் சின்னத்தைத் தேர்ந்தெடுக்கவும்; உங்கள் கேள்வியை அரட்டை பெட்டியில் தட்டச்சு செய்து send பட்டனை கிளிக் செய்து சமர்ப்பிக்கவும்

**படிநிலை 6 - வாக்கு**

a. வாக்களிப்பு தொடங்கியவுடன், வாக்களிப்பு அமர்வு முடிவடைந்ததாக தலைவர் அறிவிக்கும் வரை வாக்களிப்பு சின்னம் தீர்மானங்கள் மற்றும் வாக்களிப்பு தெரிவுகளுடன் தோன்றும்
b. வாக்களிப்பதற்கு, வழங்கப்பட்ட விருப்பங்களில் இருந்து உங்கள் வாக்களிப்பு விருப்புரிமையைத் தேர்ந்தெடுக்கவும்; உங்கள் வாக்கு பதிவு செய்யப்பட்டு விட்டதைக் குறிக்கும் உறுதிப்படுத்துதல் செய்தி தோன்றும்
c. உங்கள் வாக்கை மாற்ற, உங்கள் வாக்களிப்பு விருப்புரிமையை மீண்டும் தேர்ந்தெடுக்கவும்
d. உங்கள் வாக்கை நீங்கள் ரத்து செய்ய விரும்பினால் “**Cancel**”-ஐ அழுத்தவும்

**படிநிலை 7 - முடிவு**

33வது ஏஜிஎம் முடிவடைந்தது என தலைவர் அறிவித்த பிறகு, நேரடி ஒளிபரப்பு முடிவடையும்.

## C. ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுப் பொதுக்கூட்டம் தொடர்புடைய ஆவணங்களை எப்படி பெறுவது

1. பின்வாடும் ஆவணங்களின் நகல்களை நிறுவன வலைத்தளமான https://www.drb-hicom.com/investors/agm-33/ -இல் நீங்கள் பெறலாம்

   **i. 31 டிசம்பர் 2022 முடிவடைந்த நிதியாண்டுக்கான ஆண்டறிக்கை***
   **ii. 33வது ஏஜிஎம்-க்கான அறிவிப்பு**
   **iii. பிரதிநிதிப் படிவம்**
   **iv. கார்ப்பரேட் ஆளுகை அறிக்கை 2022**
   **v. வருவாய் அல்லது வர்த்தகத் தன்மையின் தற்போதைய தொடர்ச்சியான தொடர்புடைய தரப்பு பரிவர்த்தனைகளுக்கான ("RRPT") பங்குதாரர்களின் ஆணையின் முன்மொழியப்பட்ட புதுப்பித்தல் தொடர்பாக பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை**

   * ஆண்டு அறிக்கை 2022 நிலைத்தன்மை அறிக்கை 2022 ஐ உள்ளடக்கியது.

2. டிசம்பர் 31, 2022 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான DRB-HICOM ஆண்டு அறிக்கையின் அச்சிடப்பட்ட நகல் உங்களுக்குத் தேவைப்பட்டால், https://investor.boardroomlimited.com இல் Boardroom Smart Investor Portal மூலம் “**Investor Services**”மெனுவின் கீழ் “**Request for Annual Report**”என்பதைத் தேர்ந்தெடுத்து நீங்கள் விண்ணபிக்கலாம்.

   மாறாக, எங்கள் பங்குப் பதிவாளர்கள் bsr.helpdesk@boardroomlimited.com எனும் மின்னஞ்சல் வழி அல்லது +603 7890 4700 தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு கோரிக்கை வைக்கலாம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தை இணைய வழி நடத்த ஆவலாக உள்ளோம். 33வது ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கு முன் உங்களுக்கு கேள்வி ஏதேனும் இருந்தால், வேலை நேரத்தில் கீழ்க்காணும் முறையில் தொடர்பு கொள்ளவும்:

i. Boardroom Share Registrars Sdn. Bhd.
தொலைபேசி: **+603 7890 4700** / மின்னஞ்சல்: **BSR.Helpdesk@boardroomlimited.com**

ii. DRB-HICOM நிறுவன செயலகத் துறை
தொலைபேசி: **+603 2052 8935** / மின்னஞ்சல்: **secretarial@drb-hicom.com**

**- முடிவடைகிறது -**